<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 126/2023

அரசுதரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவலிங்கம் | வயது | : | 39 |
| தந்தை/கணவர் பெயர் | : | ராஜலிங்கம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.02.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது விருத்தாசலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். நான் கடந்த 29.06.2019அன்று ஆலடி காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்த போது நானும் தலைமைகாவலர் ஜெகதீசன் என்பரும் பகல் 11.30 மணிக்கு உதவி ஆய்வாளருக்கு உதவியாக மணல் கடத்தல் தடுப்பு சம்மந்தமாக கண்காணித்து சென்ற போது, கொட்டாரகுப்பம் ஆஞ்சநேயர் கோவில் அருகில் விருத்தாசலம் நோக்கி சந்தேகத்திற்கு இடமாக வந்த TN 90 4621 என்ற எண்ணுள்ள முன் புறம் வானவில் ஸ்ரீமுருகா என்று எழுதப்பட்டிருந்த டாரஸ் லாரியை நிறுத்தி மேற்படி லாரியை சோதனை செய்ய லாரிக்குள் சுமார் 6 யூனிட் அளவிற்கு ஆற்று மணல் இருந்தது. அதை பற்றி அதன் ஓட்டுனரிடம் விசாரிக்க

தனது பெயர் முத்தையா வயது 27 த/பெ. பெருமாள், செட்டியார் தெரு, ஆசனூர், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம், என்றும் மேற்படி டாரஸ் லாரி எங்கள் ஊரைசேர்ந்த வீரமணி த/பெ. கண்ணன் என்றும் ஆற்று மணலை திருச்சி விராலிமலை அருகில் இருந்து திருட்டு தனமாக ஏற்றி வருவதாகவும் மேற்படி ஆற்றில் இருந்து மணலை எடுப்பதால் பொதுமக்களுக்கும் குளங்களுக்கும் குடிநீருக்கு ஆதாரமான நிலத்தடி நீர் பாதிக்கும் என்று தெரிந்தும் சுயலாபம் கருதி அதிக லாபத்திற்கு விற்று பணத்தை பிரித்து கொல்லலாம் என்று எங்கள் லாரி உரிமையாளர் ஆசை வார்த்தை கூறியதின் பேரில் மேற்படி மணலை ஏற்றி வந்ததாகவும் இதற்கு எந்தவித அரசு அனுமதியோ பர்மிட்டோ இல்லை என்று கூறியதின் பேரில் மேற்படி எதிரியை கைதுக்கான காரணம் கூறி 11.40 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்தார். மேற்படி எதிரி எவ்வித துன்புருத்தலும் அச்சுறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் 11.45 மணிக்கு பதிவு செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். மேலும் ஆற்று மணலுடன் கூடிய டாரஸ் லாரியை 12.30 மணிக்கு எங்கள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.1** ஆகும். வழக்கு சொத்து எண் 210/2019, தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் கைப்பற்றப்பட்டது ஆகும். புகைப்படம் சா.பொ.1 ஆகும்.

எதிரி மற்றும் வழக்கு சொத்து சகிதம் 13.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து எதிரி மீது ஆலடி காவல் நிலைய குற்ற எண். 96/2019 சட்ட பிரிவு 379, 430, IPC r/w 21(1) MM ACT ன் படி வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினார். நான் உதவி ஆய்வாளருககு உதவியாக இருந்தேன். விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

எனது மேல் அதிகாரி உதவி ஆய்வாளர் ராதாகிருஷ்ணன். கொட்டாரக்குப்பம் ஆஞ்சநேயர் கோவில் இருக்கும் இடம் மக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திலிருந்து கிளம்பும் போது எத்தனை மணி என்று பொதுநாட்குறிப்பில் பதிவு செய்துவிட்டு தான் சென்றோம். என்னை தவிர இந்த வழக்கில் பொதுமக்கள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சி என்ற அடிப்படையில் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு புள்ளிவிவரக்கணக்கிற்காக உதவி ஆய்வாளரால் போடப்பட்டது என்பதும் அதற்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும் ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்பதும் சரியல்ல. எதிரி என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் தயார் செய்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரியல்ல.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.
அமர்வு வழக்கு எண் : 126/2023

அரசுதரப்பு 2 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெகதீசன் | வயது | : | 51 |
| தந்தை/கணவர் பெயர் | : | சுப்ரமணியன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.02.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது ஆவினன் குடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். நான் கடந்த 29.06.2019அன்று ஆலடி காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது நானும் சிவலிங்கம் என்பவரும் பகல் 11.30 மணிக்கு உதவி ஆய்வாளருக்கு உதவியாக மணல் கடத்தல் தடுப்பு சம்மந்தமாக கண்காணித்து சென்ற போது, கொட்டாரகுப்பம் ஆஞ்சநேயர் கோவில் அருகில் விருத்தாசலம் நோக்கி சந்தேகத்திற்கு இடமாக வந்த TN 90 4621 என்ற எண்ணுள்ள முன் புறம் வானவில் ஸ்ரீமுருகா என்று எழுதப்பட்டிருந்த டாரஸ் லாரியை நிறுத்தி மேற்படி லாரியை சோதனை செய்ய லாரிக்குள் சுமார் 6 யூனிட் அளவிற்கு ஆற்று மணல் இருந்தது. அதை பற்றி அதன் ஓட்டுனரிடம் விசாரிக்க

தனது பெயர் முத்தையா வயது 27 த/பெ. பெருமாள், செட்டியார் தெரு, ஆசனூர், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம், என்றும் மேற்படி டாரஸ் லாரி எங்கள் ஊரைசேர்ந்த வீரமணி த/பெ. கண்ணன் என்றும் ஆற்று மணலை திருச்சி விராலிமலை அருகில் இருந்து திருட்டு தனமாக ஏற்றி வருவதாகவும் மேற்படி ஆற்றில் இருந்து மணலை எடுப்பதால் பொதுமக்களுக்கும் குளங்களுக்கும் குடிநீருக்கு ஆதாரமான நிலத்தடி நீர் பாதிக்கும் என்று தெரிந்தும் சுயலாபம் கருதி அதிக லாபத்திற்கு விற்று பணத்தை பிரித்து கொல்லலாம் என்று எங்கள் லாரி உரிமையாளர் ஆசை வார்த்தை கூறியதின் பேரில் மேற்படி மணலை ஏற்றி வந்ததாகவும் இதற்கு எந்தவித அரசு அனுமதியோ பர்மிட்டோ இல்லை என்று கூறியதின் பேரில் மேற்படி எதிரியை கைதுக்கான காரணம் கூறி 11.40 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்தார். மேற்படி எதிரி எவ்வித துன்புருத்தலும் அச்சுறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் 11.45 மணிக்கு பதிவு செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். மேலும் ஆற்று மணலுடன் கூடிய டாரஸ் லாரியை 12.30 மணிக்கு எங்கள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். வழக்கு சொத்து எண் 210/2019, தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் கைப்பற்றப்பட்டது ஆகும்.

எதிரி மற்றும் வழக்கு சொத்து சகிதம் 13.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து எதிரி மீது ஆலடி காவல் நிலைய குற்ற எண். 96/2019 சட்ட பிரிவு 379, 430, IPC r/w 21(1) MM ACT ன் படி வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினார். நான் உதவி ஆய்வாளருககு உதவியாக இருந்தேன். விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

எனது மேல் அதிகாரி உதவி ஆய்வாளர் ராதாகிருஷ்ணன். கொட்டாரக்குப்பம் ஆஞ்சநேயர் கோவில் இருக்கும் இடம் மக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திலிருந்து கிளம்பும் போது எத்தனை மணி என்று பொதுநாட்குறிப்பில் பதிவு செய்துவிட்டு தான் சென்றோம். என்னை தவிர இந்த வழக்கில் பொதுமக்கள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சி என்ற அடிப்படையில் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு புள்ளிவிவரக்கணக்கிற்காக உதவி ஆய்வாளரால் போடப்பட்டது என்பதும் அதற்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும் ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்பதும் சரியல்ல. எதிரி என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் தயார் செய்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரியல்ல.